2023 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

குடியிருப்புகள்

***3152—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதி, செம்மண்டலம் மற்றும் குண்டுசாலை ஆகிய பகுதிகளில் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் தொகுதி செம்மண்டலம் பகுதி, குண்டுசாலையில் A, B, C மற்றும் D என்ற வகையில் 416 வீடுகள் இருக்கின்றன. அவற்றில் D வகையைச் சார்ந்த 112 வீடுகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை இடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து, அங்கே வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரின் மத்திய பகுதியில் செம்மண்டலம், குண்டுசாலை ஆகிய பகுதிகளில் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளில், பல கட்டடங்கள் 10 ஆண்டுக் காலமாக சிதிலமடைந்து, பராமரிப்பின்றி, மழை நீர் நேரடியாக உள்புகும் நிலையிலும், இடிந்து விழுகின்ற, அவல நிலையிலும் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கட்டடங்கள் கடலூரின் மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், சென்னை மற்றும் பெரிய நகரங்களில் உள்ளதுபோன்று, வீட்டு வசதி வாரியத்தின்மூலம், புதிய கட்டடங்களாகக் கட்டி, குறைந்த விலையில் அரசு அலுவலர்களுக்கும், பொது மக்களுக்கும் கொடுக்கப்படுமானால், வாரியத்திற்கும் நன்மை கிடைக்கும்; அந்தப் பகுதிக்கும் அழகு சேர்க்கும் விதமாக அமையும். எனவே, அதற்கேற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 416 வீடுகள் இருக்கின்றன. அவற்றில் 112 வீடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை இடிக்கலாம் என்ற தகவல் தற்போது சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்து வீடுகளும் மோசமான நிலையில் இருப்பதாகத் தகவல் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரோடு இணைந்து நாங்கள் அங்கே நேரடியாகச் சென்று,* inspection *செய்துவிட்டு,* Technical Committee*-யினுடைய* report*-ஐயும் பெற்று, சாத்தியக்கூறு இருக்குமென்றால், அந்த வளாகம் முழுவதையும் இடித்துவிட்டு, புதிய வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கையை கண்டிப்பாக அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் கடலூரின் மையப் பகுதியில், மாவட்ட*

ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அருகில் இருக்கின்றது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக அப்பகுதியில் பல ஆண்டுகளாக குடிசைப் பகுதிகளில் இருந்தவர்களை அப்புறப்படுத்தி, ரூ.22 கோடி மதிப்பீட்டிலே tender விடப்பட்டு, கட்டடங்கள் கட்டுவதற்கு கால்கோள் நடப்பட்டு, ஏழையெளிய மக்களுக்கு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருகின்ற பணியை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு அருகில் அமைந்துள்ள இடம் இந்த இடம். இந்தப் பகுதியிலும் சென்னையில் உள்ளதுபோல் கட்டடங்களைக் கட்டி ஏழையெளிய மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கினால், வாரியத்திற்கும் கூடுதலாக நிதி ஒரே நாளில் கிடைக்கும். அங்கு கட்டடங்களைக் கட்ட ஏதுவாக இல்லையென்றாலும்கூட, மனைகளாகப் பிரித்து விற்கப்படுமானால், அதன்மூலம் துறைக்கு பல கோடி ரூபாய் வருமானம் வரும். ஏனென்றால், இந்த இடம் கடலூரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டில் ஒன்றினைச் செய்து கொடுத்தால், அந்தப் பகுதியை மேம்படுத்துவதற்கும், கடலூர் மாநகரில் கட்டடங்கள் பல வருவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதை மீண்டும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரோடு இணைந்து, அந்த இடத்தை நாங்கள் நேரில் சென்று பார்க்கிறோம். அங்கு மனைகளாகப் பிரித்து விற்பதற்கு வாய்ப்புகள் குறைவு என்று கருதுகிறேன். இருப்பினும், அதுகுறித்து ஆய்வு செய்யப்படும். எனினும், இந்த 112 வீடுகளை இடித்துக் கட்டுவதைப் பொறுத்தவரையில், இது ஏற்கெனவே இருக்கின்ற திட்டம். அத்திட்டம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும். மீதம் இருக்கிற 304 வீடுகள் எந்த நிலையில் இருக்கின்றன, அவற்றை இடிக்கலாமா என்று ஆராயப்படும். அரசின் சார்பாக சொன்னாலும்கூட, Technical Committee

சில நேரங்களில் அதற்கு ஒப்புதல் தருவதில்லை. அவ்வாறு அவர்கள் ஒப்புதல் தந்துவிட்டால், அந்த வளாகம் முழுவதையும் இடித்துவிட்டு, புதிதாகக் கட்டி, தேவையான அளவிற்கு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீடுகளை வைத்துக்கொண்டு, மற்றவற்றை விற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

இன்றியமையாப் பொருட்கள்

***52684—திரு. கே.பி. முனுசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சி, கணவாயூர் கிராம நியாய விலைக் கடைக்கு இன்றியமையாப் பொருட்களை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேன்கனிக்கோட்டை வட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சிக்குட்பட்ட கணவாயூர் கிராமத்தில் உள்ள 116 குடும்ப அட்டைகளைக் கொண்ட பகுதி நேர நியாய விலைக் கடையில் பிரதி வாரம் புதன்கிழமை அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சூலிகுண்டாவில் உள்ள கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் கணவாயூர் கிராம நியாய விலைக் கடைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு 10–1–2023 அன்று இந்த நியாய விலைக் கடையைச் சேர்ந்த அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல்